# திராவிடநாடு

10—2—63 | வார வெளியீடு | விலை 16 காசு



## முகப்பில்.......

கலங்கிய கண்களோடு நின்றாள் தலைவி; அவள் கையைப்பற்றி னன் தலைவன். "கலங்காதே--கார் வரும்போது என் தேர் வரும்" என்று அவளுக்கு ஆறுதல் கூறினன். அவ ளும் உலகியல்தெரிந்தவள். 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்பதை அறிந் தவள். ஆகவே 'சரி' என்று சம்மதம் தந்தாள்.

தலைவன் வினைமேல் (தொழிலுக் காகச்) சென்றான். அவன் வரும் நாளை எதிர்நோக்கினள் தலைவி. நாளும் வானத்தை அண்ணாந்து பார்த்துப் பார்த்து தன் துன்பம் மாறினள். ஒரு நாள் வானத்திடலில் மேகத் திரள் கண்டாள். மகிழ்ச்சி மிகக் கொண்டாள்; தலைவன் வருவதாகச் சொன்ன கார்காலம் வருகின்றது, இனித் தலைவனைச் சுமந்த தேரும் வரும் என மனம் தேறினள்.

முகிலைக்கண்ட மயிலின் கூட்டம் மகிழ்ச்சியில் மூழ்கியது, தோகை விரித்து ஆடியது.

முகிலின் சூல் மழைத்துளிகளாக மாறியது.

ஒரு நாள், இருநாள், அல்ல; பல நாட்கள் இப்படியே நடந்தது. ஆனல் தலைவனே வரக்காணேம்! வருவான் என்று நம்பிய தலைவி நடுங் கினள். இன்னமும் காணேமே என்று ஏங்கினள்.

தோகைவிரித்து மயில் ஆடிக் கொண்டிருந்தது. தோகையின் மனம் துயரத்தால் தடுமாறிக்கொண்டிருந் தது. வானத்தின் துளிகள் நிலத்தை நனைத்தன. வனிதையின் கண்நீர்த் துளிகள் ஆடையை நனைத்தன. தலை வியின் துயரம்கண்ட தோழி துணுக் குற்றாள். இத்துயரை மாற்றும் வழி என்ன என்று ஆய்ந்தாள். ஏதேனும் சொல்லி அவளைத் தேற்றவேண்டும் என்று தெளிந்தாள்.

'என்ன சொல்லுவது?' என்று எண்ணிப் பார்க்கிறாள். இதுவரை யில் வருவார், வருவார், கவலைப் படாதே என்று சொல்லிவந்தாள். இனியும் அதையே சொன்னல் பயன் இருக்காது என்பதுதெரியும். ஆகவே வேறு என்னதான் சொல்வது என்று நினைக்கின்றாள். குற்றமில்லாத நன் மையைத் தருமாயின் பொய்மையும் சொல்லலாம் அல்லவா? ஆகவே தோழி ஒரு பொய்--நன்மையைத் தருகின்ற ஒரு பொய் சொல்லு கின்றாள்:

"அழாதே, என் தோழியே, அழாதே. கார்வந்தது, இன்னும் தலை வன் தேர் வரவில்லை என்றுதானே அழுகின்றாய்? கவலையைவிடு-இதுகார் காலம் அல்ல. ஆகவேதான் இன்னும் தலைவன்வரவில்லை. எனவே கவலையை விடு" என்றாள்.

இது கார்காலம் அல்ல என்று தோழி சொன்னாலும் தலைவிக்குக் கண் இருக்கிறது அல்லவா? அவள் தான் மேகம்கண்டு ஆடும் மயிலையும், விழும் மழைத்துளிகளையும் காணு கின்றாளே!

தோழியின் சொல்லை ஏற்றுக் கொள்ளாதவளைப்போல் மழையை யும் மயிலையும் மாறிமாறிப் பார்க் கிறாள்.

இதைக்கண்ட தோழி தன் பொய்யை மெய்ப்பிக்கப் பின்னும் பொய்யுரைகளைப் புனைந்து கூறு கின்றாள்.

"மயில் ஆடினல் மழைக்காலம் என்று ஆகிவிடுமா, என்ன? மயில் அறிவில்லாதது. ஆகவே விழும் நீர்த் துளிகளைக் கண்டு மாரிக்காலம் என்று நினைத்து ஆடுகிறது. ஒரு அறிவும் இல்லாத பீர்க்கும் பூத்துவிட்டது. ஆனல் உண்மையான மழைக்காலம் அல்ல இது" என்றாள்.

"அப்படியானல் மழை பெய் கிறதே!" என்று தலைவி இடைமறிக் கின்றாள். அதற்கும் ஒரு திறமையான காரணம் சொல்லுகின்றாள் தோழி.

"இந்தத் துளிகள் ஏது தெரியுமா? முன்னே மழைகாலத்தில் மேகம் சேர்த்துவைத்துப் பெய்த மழையில் மீந்தவை இவை. இப்போது மழை யாகப் பெய்வதற்காகப் புதிய நீர் கொண்டுவர மேகங்கள் கடலைநோக் கிப் போகின்றன. அப்படிப்போகும் போது தங்களிடம் உள்ள மிச்ச நீரைச் சிந்திவிட்டுப் போகின்றன. அதுதானே தவிர, இது மழையும் அல்ல; மழைக்காலமும் அல்ல' என்றாள். இது கலப்பில்லாத பொய் தான். ஆனல் தலைவியின் துயரை மாற்றவேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட ஒரு நல்லபொய். இந் தப் பொய்யைக் கேட்ட தலைவி கொஞ்சம் ஆறுதல் பெற்றிருக்கலாம் அல்லவா?

முன்பக்கத்திலுள்ள அழகிய இந்த ஓவியம் குறுந்தொகையில் உள்ளது:

மடவ, வாழி, மஞ்ஞை மாயினம்,
கால மாரி பெய்தென அதன்எதிர்
ஆலலும் ஆலின; பிடவும் பூத்தன;
கார் அன்று, இகுளை, தீர்க நின் படரே:
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே

(குறுந்: 251)

[மடத்தனமான மயில்கள்-காலமழை பெய்துவிட்டது என்று ஆடவும் ஆடுகின்றன; பீர்க்கும் பூத்துவிட் டது! ஆனல் தோழி, இது கார் காலம் அல்ல; உன் துயரைவிடு. முன்னே கழிந்த மழைக்காலத்தில் மிச்சமான பழைய நீரை, புதுநீர் கொண்டு வருவதற்காக, கீழே கொட்டிவிட்டுச் செல்லுகின்ற மேகத்தின் குரலே இது.]

★

ஏமாற்ற முடியாது

மலர் 21 ] ஆண்டு சந்தா ரூ. 8 (10—2—1963) தனிப்பிரதி 16-காசு [ இதழ் 24

# சண்டையை நிறுத்திவிட்டோம்!

# சமாதானத்துக்குச் சம்மதம் அளித்துவிட்டோம்!

★

## சிலகாலம் சீனச் சிறுமதியினர் இவ்விதம் பிரசாரம் செய்தனர்!

★

# ஆனால்!

சண்டை நின்றதுபோல் காட்டி,
சமாதானம் பேசுவதுபோல் பசப்பி
மீண்டும் போருக்கான ஏற்பாடுகள் செய்கின்றான்.

★

தொல்லைதரும் இந்தக் கொடியவர்களை
இனியும் நம்புவது ஏமாற்றத்தையேதரும்!

★

எனவே,

# படைபலம் திரட்டி-பணபலம் பெருக்கி

## சீனப் பகைவன் சிதறி ஓடும்வரையில் உறுதியோடு பணிபுரிவோமாக!

# வெற்றி நமதே!

# உலகம் இப்படித்தான்!

—[கோவை க. இரத்தினம்]—

அழகான அந்த 'பிளிமௌத்' கார் 'போர்டிகோ'வில் வந்து நின்றது. டிரைவர் கந்தசாமி கீழே இறங்கினன். 'அம்மா'வை லேடீஸ் கிளப்பில் கொண்டுபோய்விட்டு இப்போதுதான் திரும்பியிருக்கிருன் அவன்.

"டேய் கந்தசாமி!" — அந்தக் குரலுக்குரியவர் அவனது முதலாளி தசாவதாரம்.

"என்னங்க!" அடிமையின் குரலில் பணிவு பளிச்சிட்டது.

"கல்லூரி விடுகிற நேரமாச்சு' குழந்தையை அழைத்துவா, போ"

"சரிங்க" — பிளிமௌத் மீண்டும் ஆடி அசைந்தபடி ஓடியது, அந்தப் பதினெட்டு வயதுக் குழந்தையைக் கூட்டி வர.

"பயல் ரொம்ப நல்லவன். பத்து வருடமா என்னிடம் வேலேக்கு இருக்கிருன்." தன் அருகே இருந்தவரிடம் தசாவதாரம் பெருமையாகக் கூறிக் கொண்டார்.

"தொழிலாளி—முதலாளி உறவுக்கு உங்கள் இருவரையுமே உதாரணமாகச் சொல்லலாம்!"

நண்பர் சிரித்தபடி கூறினர். தசாவதாரமும் சேர்ந்து சிரித்தார். ஆனல் காரோட்டி கந்தசாமியின் உள்ளம்?

அது சிரித்ததா? இல்லே அழுது கொண்டிருந்தது!

வாழ்க்கையை முள் நிறைத்த படுக்கை என்கிருர்கள் பலர்; சிலரோ மலர் தூவிய மஞ்சம் என்கின்றனர்.

பலருடைய வாழ்க்கையில் இன்னல் தொடர்கதையாகி விடுகிறது. துன்பத்தில் அழுந்திய அந்த 'துராத்மாக்கள்' வாழ்க்கையை 'நரகம்' என்கிருர்கள்! துன்பம் என்பதை சினிமாக்களிலும், கதைப் புத்தகங்களிலும் மட்டுமே படித்த மேட்டுக்குடியினரோ வாழ்க்கையைச் 'சொர்க்கம்' என்கிருர்கள்!

தசாவதாரத்தின் ஓங்கி உயர்ந்து நின்ற பங்களாவைப் பார்க்கும்போது —ரொட்டியும் வெண்ணெயும் உண்ண மறுத்து 'அடம்' பிடிக்கும் சீமை நாயிடம் அவர் தம் அன்பைக் கொட்டும்போது, ஆகா! இந்தச் சொர்க்கவாழ்க்கை எத்தனை இனிமையானது என்று நினைப்பான். அடடா! 'நான் ஒரு அல்சேஷியனுகப் பிறந்திருக்கக்கூடாதா?' என்ற 'பேராசை' கூட அவன் நினைவில் எழுந்ததுண்டு!

கட்டிய கந்தலுடன், ஒட்டிய வயிரேடு தேம்பி நிற்கும் அவனது பட்ட மகிஷியை — அவள் பெற்றெடுத்த மழலைச் செல்வங்களை எண்ணும்போதெல்லாம் வேதனை அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்துவிடும்!

துன்பத்தைக் கண்டு மனிதன் சிரிக்கவேண்டும் என்கிருர்கள் முடியவில்லையே! ஓராயிரம் கோடி இன்பங்கள் ஓடிவந்தாலும் அவ்வளவையும் ஏற்றுக்கொள்ளும் மனித மனம், சிறு துன்பம் என்ருலும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறதே!

கண்ணீர்விட்டு அழவேண்டும் என்று கருதுவான். ஆனல் அழுவது கோழைத்தனம் என்கிருர்களே!

"நீ ஒரு நிமிடம் துன்பப்பட்டால் உன் வாழ்வில் அறுபது நிமிட இன்பத்தை இழந்துவிட்டாய்" என்கிருன் மேலே நாட்டு மேதை ஒருவன். அந்த மேதை, பேதையைப்போல் தன் வாழ்வில் எத்தனை காலம் அழுதானே!

மகிழ்ச்சி, மாடிவீட்டுக் குழந்தையா? துன்பம், விதவைபெற்ற பிள்ளேயா? பின் ஏன் துன்பம் என்றதும் எல்லோரும் திரும்பிப் பார்க்கவும் அஞ்சி ஓடுகிருர்கள்?

"டமார்...!"

"ஐயோ......!" என்ற தீனக்குரல் ஒன்று எழுந்து அடங்கியது.

சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒரு இளைஞனை இடித்துத் தள்ளிவிட்டு, அருகே நின்றுகொண்டிருந்த விளக்குக் கம்பத்தில் மோதி நின்றது பிளிமௌத்! கீழே இரத்தவெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தான் இளைஞன்!

கந்தசாமியின் சிந்தனை சில வினடிகள் 'ஸ்டிரைக்' செய்துவிட்டது. அந்தச் சில வினடிகளில் அங்கு ஒரு பெரிய கூட்டமே கூடிவிட்டது — வேடிக்கை பார்க்கத்தான்!

"அரைகுறையாகப் பழகினவன்களெல்லாம் இலஞ்சத்தை நீட்டி லைசென்ஸ் வாங்கிட்டு வந்துடருனுக சார்! அதனுலேதான் நாட்டிலே இத்தனை விபத்து நடக்குது......" ஒருவர் ஏதோ பிரசங்கமே செய்தார். 'ஆமாம்' போட்டுக்கொண்டிருந்தது அந்தக் கூட்டம். மனிதனே அப்படித்தான். எவன் உரத்துப் பேசுகிருனே அவனுக்கு ஆமாம் போடுவதே அவன் வழக்கம்!

"ஜப்பான் நாட்டிலே ஒவ்வொரு காரிலும் டிரைவரின் தலைக்குமேலே அவன் மனைவி மக்களின் படங்கள் மாட்டப்பட்டு, அதற்குக் கீழே, "எங்களை மறந்துவிடாதே, நினைவில் வைத்துக்கொண்டு காரைக்கவனமாக ஓட்டு" என்று எழுதியிருக்குமாம். அதைப்போல நம் நாட்டிலும் செய்தால் ஒருவேளை கார் விபத்துக்களைக் குறைக்கலாம்!" — ஒருவரது ஆலோசனை இது. மனைவி மக்களை நினைத்துக்கொண்டு வந்ததால்தானே இந்த விபத்தே ஏற்பட்டது. இதை அந்த ஆலோசகர் எப்படி அறிவார்?

"வாழ்வாவது மாயம், மண்ணுவது திண்ணம் என்ற வேதாந்தம் பிறந்த நாடாயிற்றே சார். எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என்று எண்ணி, டவுன் பஸ்சில் பிரயாணிகளை அடைப்பதுபோலவிதியின் தலையில் பாரத்தை

(16-ம் பக்கம் பார்க்க)

# ஊரார் உரையாடல்

## ஒற்றன்

முடிச்சூரார்:

பொது உடைமைப் பிரசாரம் செய்துவந்த பெரியார், சர்க்கார் அதற்குத் தடைச்சட்டம் புகுத்துவார்கள் என்று அறிந்ததும், பொது உடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட்டதாக அறிவித்தாராமே, உண்மையா?

வெட்டூரார்:

உண்மைதான்! சோவியத் ரஷியா போய்விட்டு வந்த உடனே, மும்முரமாகப் பொதுஉடைமைப் பிரசாரம் செய்தார். ஆனால், பொதுஉடைமைப் பிரசாரம் தடுக்கப்பட்டுவிடும் நிலைமை பிறந்திடும்போது, நிறுத்திவிட்டேன்—பொதுஉடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட்டேன் என்று வெளிப்படையாக அறிவித்தார். அதன்படியே பொதுஉடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட்டார்.

முடிச்சூரார்:

பெரியார், தடைச்சட்டம் வருகிறது என்பதற்காகப் பொதுஉடைமைப் பிரசாரத்தை விட்டுவிட்டது, நியாயமா? கொள்கைப்பற்று உள்ளவர்கள், பயந்து, மாற்றிக்கொள்ளலாமா?? தடைவரட்டும், உடைப்போம் என்றுகூறி அல்லவா, பொதுஉடைமைப் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தி இருக்கவேண்டும். பொதுஉடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட்டது, அவருக்கு ஏற்பட்ட அச்சத்தை அல்லவா காட்டுகிறது?

வெட்டூரார்:

அப்படித்தான், வேகாதது தின்றவர்கள் கேட்டார்கள்; பெரியார் கோழையாகிவிட்டார் என்று கொக்கரித்தார்கள். பெரியாருக்கு ஜெயிலுக்குப்போக பயம், அதனால்தான் கொள்கையை மாற்றிக்கொண்டார் என்று தூற்றினர்கள். ஆனால் அவர், சிறைக்கு அஞ்சாதவர் என்பதை, நாட்டுமக்கள் உணர்ந்து கொள்ளத்தக்க முறையில், அவசியம் ஏற்பட்ட போதெல்லாம் சிறைசென்ருர். அது கண்டபிறகு, கலகக்காரர் பேச்சுக்கு மதிப்புப் போய்விட்டது. பெரியார், பொதுஉடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட்டார் என்ருல், சிறை செல்லப் பயந்துகொண்டு அல்ல; வேறு தக்க காரணம் இருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கத் திறன் அற்றதுகள், ஏற்கனவே அவரிடம் உள்ள அருவருப்பைக் காட்டிக்கொள்ள, பெரியார் பயந்துபோய்க் கொள்கையை மாற்றிக்கொண்டார் என்று கூவுகின்றன, என்று பொதுமக்கள் கூறினர்; தெளிவு பெற்றனர். கலகம் கிளப்பியவர்களும், தங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கிடைக்காதது கண்டு, வாயிலே போட்டு மெல்ல, வேறு அவல் தேடிக்கொண்டார்கள்.

முடிச்சூரார்:

சிறை செல்லப் பயம் இல்லை என்று கூறுவதுசரி—வேறு என்ன காரணம், பொதுஉடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட? மாற்றிக்கொள்ள.

வெட்டூரார்:

பொது உடைமைப் பிரசாரத்தை நிறுத்தாவிட்டால், பெரியார் அமைத்திருந்த சுயமரியாதைக் கட்சிக்கே ஆபத்து வந்துவிட்டிருக்கும். கட்சியைக் கலைத்துவிடச் சட்டம் வந்திருக்கும். சுயமரியாதைச் சங்கத்தை இழந்துவிட அவர் விரும்பவில்லை. ஏனெனில், சுயமரியாதைப் பிரசாரம் மனிதனை மனிதனுக்கத் தேவை. பொதுஉடைமைப் பிரசாரம் செய்வதை நிறுத்திக்கொண்டாவது, சுயமரியாதைப் பிரசாரம் செய்வது, சமுதாயத்துக்கு நன்மை தரும், என்ற நல்ல காரணத்துக்காகத்தான், பெரியார் மாறினர்; பொது உடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட்டார். வேரோடு பெயர்த்து எறிந்துவிடுவது புத்திசாலித்தனமா, கிளையைக் கழித்துவிடுவது அறிவுடைமையா?

முடிச்சூரார்:

உண்மைதான்! அப்படி இருந்தும், ஏன் பலர் பெரியாரைத் தூற்றினர்கள், கொள்கையிலே உறுதி இல்லை, மாறிவிட்டார், பயந்துவிட்டார் என்றெல்லாம்?

வெட்டூரார்:

வீண் வயற்றெரிச்சல்! அவர் நடத்தும் இயக்கம், எந்த ஆபத்திலும் சிக்காமல் தப்பிப் பிழைக்கிறதே! வளருகிறதே! என்பதால் ஏற்பட்ட பொருமை, பொச்சரிப்பு. அவர்மீது, எப்போதும் ஏதாவது பழி சுமத்துவதையே தமது வேலையாகக் கொண்டவர்கள், இது

ஒரு சந்தர்ப்பம் என்று எண்ணிக்கொண்டு தூற்றிப் பார்த்தார்கள். பெரியார் இந்தத் தூற்றலுக்கு அஞ்சித், தமது போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. பொது உடைமைப் பிரசாரத்தை நிறுத்திவிட்டது மட்டுமல்ல, பொப்பிலி அரசரின் தலைமையில் இயங்கிவந்த ஜஸ்டிக் கட்சியை ஆதரிக்கலானர்.

முடிச்சூரார்:

எதிர்ப்புப் பலமாகிவிட்டிருக்குமே?

வெட்டூரார்:

ஆமாம்! மாஸ்கோபற்றி வாய் மணக்கப் பேசிய வாயால் பொப்பிலி புகழ் பாடுகிருரே, இந்த அக்ரமம் ஆகுமா? மக்கள் இதனைச் சகித்துக்கொள்வார்களா? இவரை இன்னமுமா தொண்டர்கள் தமது தலைவராகக் கொள்வது? என்றெல்லாம் ஏசினர்கள். சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரின் சீரிய நெறியை விட்டுவிட்டுச், சரிகைக் குல்லாய்க்காரருடன் கூடிக்கொண்டாரே! என்று தூற்றினர்கள்.

முடிச்சூரார்:

பெரியார், இதைக் கேட்டு என்ன செய்தார்?

வெட்டூரார்:

என்ன செய்தார் என்று கேட்கிருய்! அவரே ஜஸ்டிஸ் கட்சிக்குத் தலைவரானர்!!

முடிச்சூரார்:

போச்சு! போச்சு! பொதுஉடைமை பேசி, மதிப்புப்பெற்ற பெரியார், 'குலாம் கட்சிக்கு'த் தலைவராகி விட்டார், இனி மதிப்பாவது மண்ணுவது என்று எதிரிகள் தூற்றவில்லையா?

வெட்டூரார்:

தூற்றினர்களே, மூர்க்கத்தனமாக! அசையவில்லை, அவர். அதுமட்டுமல்ல, அந்த எதிர்ப்பு அவரை ஒன்றும் செய்யமுடியவில்லை. மதிப்புத் துளியும் மங்கவில்லை.

முடிச்சூரார்:

செல்வாக்கு அப்படியேவா இருந்தது?

வெட்டூரார்:

வளர்ந்தது! அவர் '**பெரியார்**' எனும் சிறப்புப்பெயர் பெற்றதே, பொது உடைமைப் பிரசாரத்தை விட்டு விட்டார், பயந்துவிட்டார், மாறிவிட்டார், என்றெல்லாம் **வெறுப்பாளர்** தூற்றினர்களே, அதற்குப்பிறகு தான்!!

முடிச்சூரார்:

என்னமோ, போ அப்பா! பெரியார் பொது உடைமைப் பிரசாரத்தை விட்டுவிட்டு மாறிவிட்டது, பயத்தால் என்று கம்யூனிஸ்ட் தலைவர்கள் பேசக் கேட்டிருக்கிறேன். எனக்கென்னமோ, கம்யூனிஸ்டுகள் சொல்வது தான் சரி என்று தோன்றுகிறது. கம்யூனிஸ்டுகள், இது போலச், சிறைக்குப் பயந்துகொண்டு, கொள்கையை மாற்றிக்கொள்வது கிடையாது.

வெட்டூரார்:

அப்படியா எண்ணிக்கொண்டீர்கள். விவரம் கேட்டுப் பாருங்கள். முன்பொரு தடவை கம்யூனிஸ்ட் கட்சி, சட்டவிரோதமாக்கப்பட்டுக், கலைந்துபோய்விட்டிருந்ததே, தெரியுமா?

முடிச்சூரார்:

தெரியுமே! கட்சி கலைந்தது! தலைவர்கள் சிறையில்! பத்திரிகாலயம் இழுத்துப் பூட்டப்பட்டுவிட்டது.

வெட்டூரார்:

எதற்காகத் தடை வந்தது, நினைவிருக்கிறதா?

முடிச்சூரார்:

கம்யூனிஸ்ட் கட்சியைப் பிடிக்கவில்லை, அதனுல் தடை!

வெட்டூரார்:

கம்யூனிஸ்ட் கட்சியைப் பிடிக்காததால்தான் தடை போட்டார்கள் என்ருல், பிறகு, ஏன் மறுபடியும் கம்யூனிஸ்ட் கட்சி நடத்த அனுமதி கொடுத்தார்கள்?

முடிச்சூரார்:

அது தெரியாது எனக்கு. ஆனுல், கம்யூனிஸ்ட் கட்சி, தடை என்றதும் பயந்ததா? சிறையில் தவம் கிடந்தார்கள், தலைவர்கள்.

வெட்டூரார்:

பிறகு, தவம் கலைந்து வெளியே வந்தார்கள்? தடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி, மறுபடியும் எப்படி வேலை செய்ய வெளிவந்தது?

முடிச்சூரார்:

அதுதான் தெரியாது என்கிறேன். எனக்கு அவர்கள் வீரதீரமாகச் சிறை சென்றதுதான் தெரியும். பாராட்டுகிறேன்.

வெட்டூரார்:

பாராட்டுமய்யா! அது நல்லது. கஷ்ட நஷ்டம் ஏற்றுக்கொள்பவர்களைப் பாராட்டுவது உயர்ந்த பண்பு. நான் உம்மைக் கேட்பது, இது; கம்யூனிஸ்ட் கட்சியை ஏன் தடை சட்டம் போட்டுக் கலைத்தார்கள்? தெரியாது என்கிறீர். கேளும் ஐயா, காரணத்தை! கம்யூனிஸ்ட் கட்சி, ஆட்சிமுறையை மாற்ற, **பலாத்காரம்** பயன் படுத்தலாம் என்று கொள்கை வைத்துக்கொண்டு, வேலை செய்தனர். அதுகண்ட சர்க்கார், மக்கள் மனதை மாற்றப் பிரசாரம் செய்யலாம், தேர்தலில், நின்று ஓட்டுகள் பெற்று, ஆளுங் கட்சியாகக்கூட வரலாம், அதுதான் ஜனநாயக முறை; பலாத்காரம் கூடாது; அது உமது கொள்கையாக இருப்பதால், கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைக்கிருேம் என்று கூறிச் சட்டம் கொண்டுவந்தார்கள் ....

முடிச்சூரார்:

ஆமாம், ஆமாம். இப்போது நினைவுக்கு வருகிறது.

வெட்டூரார்:

வருகிறதா! மிக நல்லது! அப்போது கம்யூனிஸ்ட் தத்துவ விளக்கக் காரர்கள், **பலாத்காரம்** தவறு அல்ல; எந்த அரசும் பலாத்காரத்திலுல்தான் அமைகிறது;

அதிலும் முதலாளித்துவ அரசு, ஜனநாயகத்தை விலை கொடுத்து வாங்கித் தனக்கு வெள்ளாட்டி ஆக்கிக்கொள்கிறது; அந்தப் போலி ஜனநாயகத்தில் நம்பிக்கை வைக்கப்போவதில்லை; பலாத்கார முறையைப் பயன்படுத்தினால் தவறு இல்லை, முதலாளித்துவ அரசைக் கவிழ்க்க, மாற்ற! பாட்டாளி அரசு அமைக்க!!---என்று பேசினார்கள் --- எழுதினார்கள். அதனால்தான், தடை வந்தது.

**முடிச்சூரார்:**

அதுதான் காரணமா, தடை போட்டதற்கு?

**வெட்டுரார்:**

ஆமாம்! பெரியார் கொள்கையிலே மாறிவிட்டார், அதற்குக் காரணம் பயம் என்று, கம்யூனிஸ்டுகள் பேசியதாகச் சொன்னீர்களே, பலாத்காரக் கொள்கை கொண்டதால், தடை செய்யப்பட்ட பிறகு, தலைவர்களைச் சிறையில் போடப்பட்ட பிறகு, கம்யூனிஸ்ட் கட்சி என்ன செய்தது?

**முடிச்சூரார்:**

வாடினார்கள்! வதைபட்டார்கள்! சிறையில்!!

**வெட்டுரார்:**

வாடி, வதைபட்டாலும், கொள்கையை விடலாமா? மாறலாமா? பயப்படலாமா? கூடாதல்லவா!! ஜெயிலிலே தலைவர்கள்! கட்சியோ கலைந்துவிட்டது. இந்த நிலையில், கம்யூனிஸ்டுகள் என்ன செய்தார்கள் என்றால், பலாத்கார முறையை நீக்கிவிடுவதாக, கொள்கையை மாற்றிக்கொள்வதாக அறிவித்தார்கள்! இனிக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக முறையில், பலாத்காரமற்ற முறையில் சட்டதிட்டத்துக்குக் கட்டுப்பட்ட கட்சியாகப் பணியாற்றும் என்று அறிவித்தார்கள்! பிறகுதான் தடை நீங்கிற்று. தலைவர்கள் வெளிவந்தார்கள்! கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்தது. புரிகிறதா? கொள்கையை விட்டுவிட்டதால்! மாற்றிக்கொண்டதால்!!

**முடிச்சூரார்:**

ஐயயோ! கம்யூனிஸ்ட் கட்சியும், கொண்டிருந்த கொள்கையை மாற்றிக்கொண்ட கட்சிதானா?

**வெட்டுரார்:**

ஆமாம்! இல்லையானால், வெளியே வந்து வேலை செய்திருக்கவே முடியாதே!

**முடிச்சூரார்:**

மாற்றிக்கொண்டார்களா....

**வெட்டுரார்:**

ஆமாம்! சிறையில் கிடக்கப் பயந்துகொண்டு மாற்றிக் கொண்டார்கள்--கோழைகளாகிவிட்டனர், கொள்கையை மாற்றிக்கொண்டனர், என்று தூற்றலாம்--அவர்கள்போல நமக்கு மனப்போக்கு இருந்தால். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை. பலாத்காரம் என்ற கொள்கையை விடாப்பிடியாக வைத்துக்கொண்டு, அதன் காரணமாகத் தடைப்படுத்தப்பட்டு, இயங்க முடியாமல், பொதுத் தொண்டு ஆற்றமுடியாமல், பொது உடைமைக் கருத்துக்கு ஆதரவு தேடும் பிரசாரம் செய்யமுடியாமல், ஜனநாயகமுறையில் ஆட்சியை மாற்றும் வாய்ப்பைப் பயன்படுத்தமுடியாமல், அடைபட்டுக் கிடப்பதைவிட, வீரம் மட்டும் போதாது, இடம், பொருள், ஏவல் அறியும் திறனும் வேண்டும் என்பது அறிந்து, தடை நீக்கிட வழி தேடிக்கொண்டார்களே, அது பாராட்டுதலுக்கு உரியது. தூற்றுவது ஏன்?

**முடிச்சூரார்:**

பெரியார் மாறிவிட்டார், பயந்துவிட்டார், என்று அவர்கள் தூற்றினார்களே?

**வெட்டுரார்:**

அது அவர்களின் தவறான கணக்கின் விளைவு. பொதுவாகவே இன்னொரு கட்சியைத் தூற்றித் தமது கட்சியை வளர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணுபவர்கள், ஆத்திரக்காரர்கள்; வேறென்ன கூறமுடியும். தமது கட்சியை வளர்த்துக்கொள்ள வழிதெரியாததாலும், வகை இல்லாததாலும், வளர்ந்துவரும் வேறு கட்சிமீது, எப்போது என்ன பழி சுமத்தலாம், பகைக்கலாம், என்று பல் விளக்கிக்கொண்டிருப்பவர்கள், சிலர் உண்டு. நாளாகவாக, பொதுமக்கள், அப்படிப் பட்டவர்களின் பேச்சை மதிப்பதில்லை. ஜெயிலுக்குப் போகப் பயந்து கொண்டு பெரியார் பொது உடைமைப் பிரசாரத்தை விட்டுவிட்டார், கொள்கையை மாற்றிக்கொண்டார் என்று தூற்றினார்களே--அதற்கு மதிப்பு ஏற்பட்டதா! பெரியார் ஆனாரே, அந்தத் தூற்றலைப் பெற்றவர்!! ★


**"Carry on! But Remember....!!"**

★

**C. N. A.**

**On**

**Freedom of Speech**

**at the**

**RAJYA SABHA**

★

[அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவையில் 25-1-63 அன்று பிரிவினைத் தடைச் சட்ட மசோதா பற்றிய விவாதத்தில் கலந்துக் கொண்டு ஆற்றிய ஆங்கிலப் பேருரையும் அதன் தமிழாக்கமும்]

**விலை 75 காசுகள்**

விபரங்கட்கு:

**சுகுமாரன் பதிப்பகம்**

**80, சி. எஸ். செட்டித் தெரு — சின்ன காஞ்சிபுரம்.**

# ஆரல்லை யார்!

எழுபதாவது வயதை எட்டிப் பிடித்திருந்தார் பரமேசுவரர். அவரை யாரும் பரமேசுவரன் என்று 'அன்' விகுதி போட்டு அழைத்தது கிடையாது. கிடையாது என்றால், அவரது 25ம் வயது தொட்டு இன்று —இந்த எழுபதாம் வயது வரை, அதற்கு முன்பேகூட — குழந்தைப் பருவத்திலிருந்துதான் — அவரைப் பரமேசுவரன் என்று முதலிலிருந்து கடைசிவரை அழுத்தந் திருத்தமாக யாரும் அழைக்கச் சம்மதிக்கவில்லை. 'அப்படியானால் பெயர் வைத்தவர்கள் எப்படி அழைத்தார்கள்' என்று தானே கேட்க வருகிறீர்கள்? அந்தக் காலத்தில், எந்தப் பெரியவர்களாவது சும்மா 'பரமேசுவரன்' என்று சொல்லிவிட்டு நிறைவு கண்டு விடுவார்களா என்ன! பெயர் வைத்த பெரியவர்கள் 'பரமேசுவரப் பிள்ளை, பரமேசுவரப் பிள்ளை' என்று தலையில் தட்டி நாலு தடவை சொன்ன பிறகு தானே நிறைவு கண்டார்கள் என்று இங்கே சொல்லவேண்டுமா என்ன? அதன் பிறகு அவரைப் பெற்ற அன்னை 'பரமு' என்று அன்பொழுக விளித்தார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவரது தந்தை, அந்தப் பரமுவை (பெயரைத்தான்) விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு விட்டார். இளவயது நண்பர்கள் வேண்டுமானால் — சிலர் — 'பரமா' என்று கூவியிருக்கிறார்கள். பள்ளியிலோ, கல்லூரியிலோகூட அவரைச் சுற்றிலும் தெரிந்தவர்களே இருந்துவிட்டகாரணத்தால், அங்கும் பரமு அவரை விட்டுப் பிரிந்தது கிடையாது. பாடத்தைச் சரியாக ஒப்புவிக்காமல் அவர் முரண்டு பண்ணிய சமயங்களில் அவர்மீது கடிந்துகொண்டு பேச முனைந்த தமிழாசிரியர்கள் சிலர்கூட, தவறிப்போய், அல்லது மறந்துபோய் அங்கே அன் விகுதியைப் போட்டது கிடையாது. அவர்கள் மறவாமல் விளிவேற்றுமை சேர்த்து ஆகார உருபேற்றியே அழைத்தார்கள். அதாவது, 'அட பரமேசுவரா!' என்று கூவினார்கள். எதற்கும் புறனடை என்று ஒன்று உண்டல்லவா! அப்படித்தான் தமிழ்த்தாயின் வயிற்றில் பிறந்து, தமிழ்த்தாயின் மடியில் தவழ்ந்து, பிறகு ஆங்கிலப் பேராசிரியர் ஆன பின்னர் தமிழ் மரபை மறந்துவிட்டவர்களாகிப் 'பரமேசுவரன்' என்று அழுத்தந் திருத்தமாகச் சில பேராசிரியர்கள் எப்போதோ சில தடவை விளித்திருக்கிறார்கள். என்றாலும் புறனடையேபொதுநடையென்றும், பொதுமுறை என்றும் கணக்கு வைத்துக்கொள்ள முடியாதல்லவா?

## கனகு

அவரது ஐம்பதாவது வயதுவரை, பலர் பிள்ளையவர்கள் என்றும், சிலர் பரமேசுவரப் பிள்ளை என்றும் அவரை அழைத்துவரத் தலைப்பட்டிருந்தார்கள். அதாவது, அப்படிப்பட்ட சூழ்நிலையில் புழங்கி வருவதை 25வது வயது முதல் தமக்கு உரியதாக்கிக் கொண்டிருந்தார் திருவாளர் பரமேசுவரர். ஐம்பதாவது பருவத்தை அவர் தாண்டுவதற்கும் காலமாறுதல், நிலைமை மாறுதல், உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை மாறுதல் எல்லாம் வந்து ஒத்துக்கொள்வதற்கும் சரியாக இருந்தது. அந்தக்காலம், அந்த நிலைமை, அந்த ஏற்றத்தாழ்வு எல்லாவற்றையும் வீழ்த்திக் கொண்டு மேலே வந்த புதியவர்கள் 'பரமேசுவரர்' என்று அவருடைய நிலைமைக்கும், தகுதிக்கும், வயதுக்கும் ஏற்றுவரும்படி 'அர்' விகிதி போட்டு அழைக்கத் தொடங்கினார்கள். என்றாலும் 'பிள்ளை' அவரைவிட்டு இலேசில் பிரிவதாக இல்லை. பிள்ளையென்ற சாதிப்பெயர் எவ்வளவு பிற்போக்குத் தன்மை நிறைந்ததோ, அவ்வளவு பிற்போக்குத் தன்மைக்கும் மேலே ஒருபடிபோய் அனுபவம் கண்டது திருவாளர் பரமேசுவரனின்கொள்கை. அவரைப்பொறுத்தவரையில் முன்னது, அதாவது பிள்ளை என்ற சாதிப் பிற்போக்கு அவர் குணத்தோடு இணங்கி நிற்பது; அவர் இயல்புக்கும், அதற்கும் ஏறுமாறு இல்லை என்னும் நிலையில் இசைவுகொண்டுகிடப்பது. 'அவர் விழைவு இது, அந்தப் பிற்போக்குத் தன்மை இது' என்று இரண்டையும் வேறுபடுத்தி, இனம் பிரிக்கமுடியாத அளவு இருமை நீங்கி ஒருமைப்பட்டுக்கிடந்தது. பின்னது—அதாவது அவரது கொள்கை, பின்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஏமாந்தோரை ஏமாற்றிக்கொண்டிருப்பதே குறிக்கோளாகக்கொண்ட அவரது அற்பச்செயல், அவர் மனங்கொண்டமட்டும் நிறைவு காணும் அளவு பெரிய பெரிய விளைவுகளை உண்டாக்காமல் சிறுசிறு டலன்களை மட்டும் எடுத்துக்காட்டிக் கொண்டு நின்றது. அது அவரது இணக்கம் எனும் பிடிக்குள், கட்டுக்குள் முழுக்க முழுக்கச் சிக்கிக் கொள்ளாமலிருந்தது. எனவே, ஒன்று அவரோடு எல்லாவற்றாலும் ஒத்துப்போனது. மற்றொன்று அவரோடு எல்லாவற்றாலும் ஒத்துப் போகும் அளவு வளைவுபடுத்தப்பட்டுக்கொண்டு வருவது. இந்த நிலையில் ஒன்றுக்கு ஒன்று சளைத்ததல்ல

என்ற வகைக்குட்பட்ட இரண்டு கொள்கைகளில் கடுமைமிகுந்த ஒன்றைக் கையோடு வைத்துக்கொண்டிருக்கும்போது, விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கும்போதுமற்றொன்று, அதாவது கடுமைகுறைந்த ஒன்று கையிலிருப்பது அவ்வளவாக உறுத்தக் கூடிய நிகழ்ச்சியல்லவே!

எனவே, திருவாளர் பரமேசுவரரைப் பொறுத்தவரையில் அந்தப் 'பிள்ளை' என்ற வால் அவர் பின்னோடு சுற்றிக்கொண்டிருப்பதை அவர் பொருட்படுத்தவில்லை. பெரிது படுத்தவில்லை.

அவரது உண்மை உருவை அடிமுதல் முடிவரை நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தவர்கள், அவரோடு நெருங்கி உறவுகொள்ள எப்படி என்றுமேவிழைந்தது கிடையாதோ, அப்படியே அவரோடு அந்தப்பிள்ளையென்ற வாலையும் சேர்த்துக் குறிப்பிட்டது கிடையாது. எப்போதும் இவர்களுக்கு அவர் பரமேசுவரர்தான். அந்தப்பிள்ளை என்னும் வால், பிற்போக்குப் பிண்டம் இவர்களைப் பொறுத்தவரையில் எப்போதோ செத்துப்போனது; — ஆழக்குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

மெல்ல மெல்லப் பரமேசுவரரின் கொள்கை பிடிப்பிழந்துகொண்டு வந்தது — அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்தோரிடமிருந்து. 'அது ஏன்?' என்று கேட்கமாட்டீர்கள். அதுதான், நாளும் நாளும் காலம்மாறிக்கொண்டு வருவதையும், நிலைமைகள் மாறிக்கொண்டு வருவதையும் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோமே! பரமேசுவரப் பிள்ளை என்று மரியாதை விளியோடு கண்ணைமூடிக்கொண்டு அவருக்குப் பாதபூசைபோட்டு, அவர் உருவத்தைப் பார்ாமலே, அவர் உள்ளத்தை அளக்காமலே, அவரைப் பின்பற்றி வந்தோரெல்லாம், எதையோ கண்டு மருண்டோர்களாகித் திடீரென்னு கண்ணைத் திறந்தார்கள். பரமேசுவரப்பிள்ளை யார்?' என்று கண்ணைத் திறந்த கையோடு—ஏற இறங்கப் பார்க்கத்தொடங்கினார்கள். அவர் உருவம் நன்றாகத் தெரிந்தது. அதே கையோடு அவர் உள்ளத்தை அந்தக் கண் விழித்தார் சிலர், — எடைபோட வல்லோர்-எடைபோட முனைந்தனர். துல்லியமாக எடையும் போட்டுவிட்டனர். பிறகு கேட்க வேண்டுமா? அதுதான் காலம் மாறிக்கொண்டு வருகிறது, நிலைமை மாறிக்கொண்டு வருகிறதே!

மெல்ல மெல்லப் பரமேசுவரரின் கொள்கைக்குச் சரிவு ஏற்பட்டுக் கொண்டு வந்தது. அவரைப் பரமேசுவரப் பிள்ளை என்றும், பிள்ளையவர்கள் என்றும் வாழ்த்தும்,வணக்கமும் செய்து புகழ்பாடியோர் எல்லாம், 'இனி அவரைப் பின்பற்றினால் நாமும் ஈடேற முடியாது' என்று மெல்ல மெல்லப் பின்வாங்கி அருகத் தொடங்கினர்.

இன்னும் பரமேசுவரருக்குக் கொஞ்ச நஞ்சமாகச் செல்வாக்கிருந்தது. அந்தக் கொஞ்ச நஞ்சச் செல்வாக்கைப் பார்த்து ஒரு கும்பல் வாய் ஊறிக்கொண்டிருந்தது. அந்தக் கூட்டம் எப்படிப்பட்டது தெரியுமா? ஓரணா சில்லறை முதல் ஒரு இலட்ச ரூபாய்வரை எது கிடைத்தாலும் சரி, அதில் எதற்காகவும் எதையும் செய்யும் இழி தன்மை கொண்டது அந்தக் கூட்டம். எதையும் என்றால், நல்லதை என்று எண்ணிவிடாதீர்கள்! அல்லதை, அந்தக் கூட்டத்தால் வல்லதை! நல்லோர் நினைத்துப் பார்க்கவும் நாணம் கொள்வதை!

பரமேசுவரருக்கு வேறு வழி தோன்றவில்லை. பாவம் தம்முடைய பிற்போக்குக் கொள்கையை விடுவதற்கும் அவருக்கு மனமில்லை. அவர் ஆசையெல்லாம் அந்தப் பிற்போக்குத் தன்மையைக் கை முதலாக வைத்தே எதையும் செய்யவேண்டும் என்பது. பிற்போக்கு ஒழிந்தால் அல்லவா நல்லாரிணக்கம் ஏற்படும். உழைத்து வாழ்வோருக்கு உபகாரம் செய்வதுபோல் உபசார வார்த்தைகள் மட்டும் பேசி அவர்களை உறிஞ்சப்பார்க்கும் குடிகெடுத்த குணம் அவரைவிட்டு நீங்கினால் அல்லவா உண்மைத் தொண்டரொடு கூட்டுக் காண முடியும்!

எனவே, கொஞ்ச நஞ்சமிருந்த செல்வாக்கையும்அந்தக்கொள்ளைக் கும்பலிடம் ஒப்படைத்துவிட்டு, வேளைக்கு ஒரு கருத்தும், வேளைக்கு ஒரு கூப்பாடும், வேளைக்கு ஒரு இழிதகைமையும் கொண்ட அந்தச் சந்தர்ப்பவாதக் கயமையாளரின் கூட்டாளியானார் பரமேசுவரர்.

அந்தக் கொள்ளையரிடம் ஒப்படைக்கப்பட்ட கைமுதலா திரும்பி வரப்போகிறது?—செல்வாக்கு என்னும் கை முதல்!

இப்போது அந்தக் கொள்ளையர்கள்,பரமேசுவரரைப் பிள்ளையவர்கள் என்றோ அல்லது பரமேசுவரர் என்றோ, அழைப்பதில் நிறைவு காணாதவர்களாகக் காட்டிக்கொண்டார்கள். பிற்போக்குக் கொள்கையை ஒழித்தோட்டுவது அவர்களது உளமார்ந்த குறிக்கோள் அல்லவென்றாலும், அந்தக் குறிக்கோளை அவர்கள் நிறைய நிறைய உடையவர்கள் என்று ஊருக்கும், உலகுக்கும் தம்பட்டமடித்துக் காட்டுவதில் பெருமை மிகக் கொள்பவர்கள். எனவே, பரமேசுவரப் பிள்ளையை நாங்கள் ஒழித்துவிட்டோம்- அதாவது பிள்ளையை ஒழித்துவிட்டோம் என்று மிகமிக ஓங்கிக் குரல் எடுத்து ஒலியெழுப்பக் கிளம்பினார்கள். அப்படி அவர்கள் ஓங்கிக் குரல் எழுப்பியதற்கு ஒரு காரணம், அந்த அவல ஒலியால், 'ஏற்கனவே பாமேசுவரரைப், பரமேசுவரர் என்று அழைத்து வந்தனர் நல்லோர்—பிற்போக்குச் செயல்களின், நடைமுறைகளின் உண்மையான எதிர்ப்பாளர்'—என்ற கண்கூடான உண்மையை மறைத்துவிட வேண்டும் என்பதே!

ஒரே கல்லில் ஏகப்பட்ட மாங்காய்களை உதிர்க்க விரும்பிய அந்தக் கயமையின் பேராளர்கள் மற்றொன்றையும் செய்தார்கள். ஒருபுறம் பிள்ளையை ஒழித்துவிட்ட, — பிற்போக்கின் எதிர்ப்பாளர்கள் தாங்கள் என்று காட்டிக் கொள்ளும் அதே கையோடு,அந்தச்செத்தபிள்ளையை விடாப் பிடியாக மடிமேல் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கும் பரமேசுவரரையும் கேலிபண்ண வேண்டும் என்று எண்ணினார்கள்! அப்படிப் பரமேசுவரரைக் கேலிபண்ண வேண்டுமென்று அவர்கள் எண்

தங்கத்தரணியில் சங்கத் தமிழ் ஏடுகள்!

**புதுவை வாணன்**

எழுதியது,

| | |
|---|---|
| தலைவணங்காத் தமிழன் விலை ரூ. | 1—00 |
| கடைசி முத்தம் | 0—37 |
| சிற்பங்கள் சிரிக்கின்றன | 0—25 |

**கண்ணம்மாள் பதிப்பகம்**

திருப்பாபுலியூர்.

ணிய எண்ணம் உண்மையளவில் செத்த பிள்ளையைக் கொஞ்ச நினைக்கிறாரே பரமேசுவரர் என்பதால் அல்ல. யாரிடம் நட்புக் கொள்ளவேண்டும் என்று தெரியாமல் கொஞ்ச நஞ்சமாக மிஞ்சியிருந்த செல்வாக்கையும், பணம் என்றால் எதற்கும் பல் இளிக்கும் எங்களிடம் ஒப்படைத்துவிட்டு, 'அம்போ' என்று நடுத்தெருவில் நிற்கின்றீரே என்பதைக் குத்திக்காட்ட, 'யார் இந்தப் பரமேசுவரர் என்று அறிந்திருப்பவர்கள் கூட வினவ வேண்டிய நிலைக்கு வந்துவிட்டீரே' என்பதைக் கேலி கலந்த குரலில் எடுத்துச் சொல்ல.

எனவே, அவர்களது ஏற்பாட்டின்படி, பரமேசுவரர் பரமேசுவரனார் ஆனார். பாவம் அந்தப் பரமேசுவரர்! பரமேசுவரனார் என்று தாம் அழைக்கப்படும்போது, 'ஆர்' என்ற மரியாதை விகுதியோடு அழைக்கப்படுவதாக எண்ணி மகிழ்ந்துகொண்டிருக்கிறார். அந்த 'ஆர்' என்பதை அவருடைய நலம் விழைவோராக நடித்துக் காட்டுவோர் எதற்காகப் பயன்படுத்துகின்றனர் என்பதை ஓர்ந்து பார்க்கும் தெளிவு இன்னும் அவருக்கு ஏற்படவில்லை. அதை ஓர்ந்து பார்க்கும் தெளிவு வரும்போதுதானே 'பரமேசுவரர் யார்? யார்?' என்று தம்மை அறிந்திருப்பவர்களே கேட்க வேண்டியதொரு இக்கட்டான நிலைமை வந்துவிட்டதை அவரால் உணர்ந்துகொள்ள முடியும்! அப்போதுதானே அவரைப் பொறுத்த வரையில் 'ஆர்' என்ற மரியாதை விகுதியை, அவரை அடுத்துக் கெடுப்பதற்காகக் கூட்டி வைத்துக்கொண்டிருப்போர் பயன்படுத்துவது 'யார்?' என்ற வினைச் சொல்லா என்பது புரியும்?


போன்: 73270 தந்தி: ஸ்டேவெல்

மகிழ்ச்சிக்கும், உல்லாசத்திற்கும் ஏற்ற தங்குமிடம்

**சாரதா நிவாஸ்**

3/4 சல்லிவான் கார்டன் ரோடு, (வழி) எட்வர்டு எலியட்ஸ் ரோடு மைலாப்பூர், சென்னை—4





ஊரே விழாக்கோலம் பூண்டது! வணிகக் கோமான் மகனுக்கும், மங்கை அவளுக்கும் மண விழா! பெரிய இடத்து மணமன்றோ! மகிழ்ச்சிக்கு ஏது குறை?

பட்டாடை உடுத்திய பாவையர் ஒருபுறம்! மங்கல நாதம் முழங்கி விரிந்து பரந்தது அந்த வேளையில்! மாலைதாழ் சென்னி, வைரமணி தூணகத்து, நீலவிதானத்து, நித்திலப்பூ பந்தல்கீழ், கோல மயிலனையாள், குளிர்முகம் கொண்டவள், மணநாண் ஏற்றாள்.

அவளோ, அழகின்திரு! ஆடகப் பொற்பாவை! மலர்க்கொடியின் மறுபதிப்பு! கயலின் உருக்கொண்ட விழிகள்! பெண்ணுக்குப் பெண்ணே, காதல் வயப்படும் கட்டிளமைக் குமரி அவள்.

அவளின் சாயல் கண்டு, மயிலும் ஒளியும்; அவள் அழகு நடை கண்டு, அன்னமும் வெட்கும். குழலும், யாழும் குழைத்த அவள் மழலை மொழிக்குப் பச்சைக்கிளியும் பொறாமை கொள்ளும்.

அழகி ஒருவளின் கடைக் கண்ணால் கட்டுண்டவன் காளையல்லவா? அவளின் அழகு, அவனுக்கு ஆயிரம் கதைகள் கூறியது. மது குடிக்கும் வண்டு, மலரைச் சுற்றிச் சுற்றி இசைபடுவதுபோல், உள்ளத்து உவகை எல்லாம், சொல்லாக, அதனை அவன் காவியமாக்கினான்!

'பொன்னே! மணியே! தண்புனல் தென்றலே! பூம்பொழில் வனப்பே! யாழின் இசையறியா இனிமையே! சிற்றலையின் அழகிற்கு இலக்கணம் வகுக்கும், தாழ் இருங்கூந்தல் தையலே!' என்று, மனம் ஒரு நிலைப்படாமல் மயங்க, மறக்கொணாச் சொற்களால் பாராட்டினான்.

ஆனால்...? அவ்வண்டுக்கு, மற்றுமொரு இதழ் விரித்த மலரொன்று, மதுகொண்டு நின்றது! அவன் போதையாலே மயங்கினான்! பூம்பொழில்வனப்பு வாடியது! புதுமலர்த் தேன் அவனை நாடியது.

வானத்து நிலவு, வனப்பூட்டியது அவன் வாழ்வில்! அந்த வனப்பின் முழு எழில் கண்டான் — அவளிடத்தே!

நாட்கள் நகர்ந்தன. நாயகன் வரவுக்காக நங்கையவள் காத்திருந்தாள்—நீர்கண்ட கருங்கண்கள் பளபளக்க! அதேபோது, காதல் வேட்கையின் பயனாய், கண்சிவப்ப, இன்பத்தால் அவர்கள் கண்கள் நீரால் நனைந்தது!

இரவும், பகலும் காணும் இயற்கையின் குணமேபோல், ஆடவன் அவன் மனதில், நிலவனையாள்மேல் ஐயம் எழ, அவளை ஒதுக்கிப் பிரிந்தான். புதுமலரான அந்நங்கை, வாடி தலை கவிழ்ந்தாள்!

அவ்வேளை, கணவனின் பிரிவால், துயர் தாங்காது நொந்த, அந்த அழகோவியத்தைக் காணவந்தனள் ஒரு பெண்......ஆறுதல் கூற:

'பெண்ணே! உனைக் காண என் மனம் வாடுகிறது! நானும் உன்னைப் போல், கணவனைப் பிரிந்து, பிரிவாற்றாமையால், வேதனையுறுபவள்தான்! எனினும் நீ உன் கணவனை அடைந்து, இன்புறுவாய்!' என்றனள்.

'நீ கூறியதுபோல், என் கணவனை யான் பெறவேமாட்டேன்.

(12-ம் பக்கம் பார்க்க)

# தங்கச் சங்கிலி

—ப. கதிரவன்—

பொன்னம்மாவின் நெஞ்சு "படபட"வெனத் துடித்தது. அன்றிரவு அவளுக்கு உறக்கமே வரவில்லை. நீந்தத் தெரியாதவன் கிணற்றில் விழுந்துவிட்டால் எப்படித் தவிப்பானே, அம்மா திரித்தவித்தாள். விடை காண முடியாத வினு அவளை வாட்டி வதைத்தது.

பெற்றவர்கள் சொல்லைக் கேட்பதா? அல்லது கரம்பிடித்த கணவனின் சொல்லைக் கேட்பதா? தீர்க்க முடியாத இப் பிரச்சினையால் அவள் திக்குமுக்காடினுள். அப்படி என்னதான் அவர்கள் சொல்லுகிருர்கள்?

பொன்னம்மாவின் கணவன் மாரிமுத்து, ஒரு சாதாரண அச்சுப் பட்டறைத் தொழிலாளி. அன்ருடம் உழைத்துத்தான் சாப்பிடவேண்டும் என்ற "உன்னத நிலை"யில் இருப்பவன். அப்படி இருந்தும் ஓரிரு கெட்ட பழக்கங்கள் அவனை ஒட்டி இருக்கத்தான் செய்தன. அவனிடம் இருந்த 'குடி'ப் பழக்கம் அவனை அறியாமலேயே, அவன் குடியைக் கெடுத்து வந்தது. அரசாங்கத்தின் அனுமதியுடனேயே 'அவை'களையெல்லாம் அருந்துவதற்கு அவன் என்ன செல்வச் சீமாஞ? மறைந்தும், பதுங்கியும் அவன் "இலட்சியத்"தை நிறைவேற்றியே வந்தான். வரவுக்கு மேல் அவன் செலவு செய்வது பொன்னம்மாவிற்கு வருத்தத்தைக் கொடுப்பினும், அவள் ஏனே அதுபற்றி வாய் திறக்கவே இல்லை.

அன்று ஏனே சோர்வுடன் மாரிமுத்து வீட்டிற்குத் திரும்பி வந்தான். "ஏன் அத்தான்! இன்று வேலையில்லையா? ஏன் என்னமோமாதிரி இருக்கிறீர்கள்?" அமைதியாகத்தான் பொன்னம்மா கேட்டாள். ஆனுல் மாரிமுத்துவோ, தான் அடைந்த ஆத்திரத்திற்குத் தன் சிவந்த விழிகளை ஆதாரமாகக் காட்டினுன். பெட்டிப் பாம்பாய் அடங்கிவிட்டாள் அவள். அப்படியே சில நாட்கள், போவதும் வருவதுமாகக் காலத்தைக் கழித்தான் மாரிமுத்து.

மாரிமுத்துவை அவன் முதலாளி வேலையிலிருந்து நீக்கிவிட்ட செய்தி பொன்னம்மாவின் காதில்விழ நீண்ட நாட்கள் பிடிக்கவில்லை. கலங்கினுள்; கண்ணீர் வடித்தாள்: பாறையின்மேல் விதை தூவிப் பயன் என்ன?

தொடர்ந்து வருவதே துன்பத்தின் தொழில் போலும்! மாரிமுத்துவைத் தேடி அவன் வீட்டைப் பலபேர் "முற்றுகை"யிட்டனர். அவர்கள் வேறு யாருமல்ல; அவ்வப்பொழுது மாரிமுத்துவுக்குச் "செல்வுக்குக் கொடுத்தவர்கள்." கடன்பட்டவனின் நெஞ்சு படும் துயரத்திற்குத்தான் இவ்வுலகில் உவமையேது?

"பொன்னம்மா!" தாழ்ந்த குரலில் மனைவியை அழைத்தான். "ஊ...ம" பார்வையிலேயே பதில் அளித்தாள். "நான் ஒன்னு கேட்கிறேன்...கோபிச்சுக்க மாட்டையே?" பீடிகைபோட்டான் மாரிமுத்து, "கோபம் வரக் கூடாததுக்கு நான் ஏன் கோவிச்சுக்கணும்?" எதிர்க்கேள்வி போட்டாள் பொன்னம்மா. "ஒண்ணுமில்லே...... அதாவது" வார்த்தையை மென்று விழுங்கினுன் அவன். பின்னர் ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசத்தொடங்கினுன் அவன். "உன்னுடைய தங்கச் சங்கிலியைக் கழட்டிக்கொடு. யாருகிட்டேயாவது அடகுவைத்துப் பணம் வாங்கிக் கடன்காரர்களுக்கெல்லாம் கொடுத்திடலாமென்னுநினைக்கிறேன். நாளைக்கு அரிசி வாங்கறதுக்குக் கூடக் கையிலே காசில்லே"—அவன் வார்த்தையை முடிப்பதற்குள் அவள் சீறிப் பாய்ந்தாள். "சீ? வெட்கமில்லையா? உழைக்காமே ஊர் சுத்தறது; இப்போ தாய்வீட்டார் போட்ட ஒரே ஒரு தங்கச் சங்கிலியையும் கொடுன்னு கேக்கறியே! இதுக்குத் தற்கொலை சேய்துக்கறது எவ்வளவோ மேல்" அவ்வளவுதான் 'பளார் பளார்' என அவன் கரங்கள் அவள் முகத்தில் மாறிமாறிப் பதிந்து ஓய்ந்தன.

அடுத்த நாள் அவள் வீட்டில் காணப்படவில்லை. எங்கே சென்றுவிட்டாள் என்று யாருக்குமே புரியவில்லை, ஆனுல் அவள் தாய்வீட்டிற்குத்தான் சென்றிருக்கவேண்டும் என எண்ணி மாரிமுத்து மன அமைதியுடனேயே இருந்தான்.

அவன் நினைத்தது போலவே 'தாயகம்' சென்றிருந்த பொன்னம்மா மூன்று நாட்கள் கழித்து அன்று மாலை தான் கணவன் வீடு திரும்பியிருந்தாள். அன்றிரவுதான் தூக்கத்தையும் துறந்து, துன்பச் சுமை தாங்கமுடியாமல் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தாள்,

"புருஷன் பேச்சைக் கேட்டு நகையை கழட்டிக் கொடுத்திட்டா..... இனிமேலே தாய் வீடுன்னு ஒன்னு உள்ளதுங்கறதே அடியோடு மறந்திடணும். கண்டபடி திரியறது; கடனை வாங்கறது; கடைசியிலே போட்டிருக்கிற நகையைக் கழட்டி அடகு வைக்கிறது. தான் சம்பாதிக்க வக்கில்லேன்னுலும் மற்றவங்க போட்ட நகையைக் கழட்டிக் கொடுன்னு கேக்க மனம் வருது. சீச்சீ, இதுவும் ஒரு பிழைப்பா? போடிபோ. தாய்வீடு வேணுமின்னு இருந்தால் தாய்வீட்டார் போட்ட நகைச் சொத்தைக் காப்பாத்து." தாயார் கூறிய சொற்கள் ஈட்டியாக அவள் இதயத்தில் பாய்ந்தது.

"பொன்னம்மா! உன் சங்கிலியைக் கழட்டிக் கொடு. எங்காவது அடகு வைத்துப் பணம் வாங்கிக் கடனைத் தீர்த்திடலாம். கடனைத் தீர்க்காமே நான் இனிமேல் வெளியே தலைகாட்ட முடியாது. நல்லா யோசித்துப் பாரு. சங்கிலியை இப்பொழுது கொடுக்கப் போறியா? இல்லையா?" மாரிமுத்துவின் மிரட்டல் மீண்டும் அவள் நினைவிற்கு

வந்து தாக்கியது. கலக்கமிகுதியிலும் அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள்:

காலைக் கதிரவன் மெல்லத் தலை காட்ட ஆரம்பித்தான். சலனமற்ற முகத்தோடு–சஞ்சலமற்ற நெஞ்சோடு பொன்னம்மா எழுந்தாள். ஆனால் மாரிமுத்துவைத்தான் காணவில்லை. தெம்போடும், தெளிவோடும் அவள் வீட்டு வேலைகளைத் தொடர்ந்தாள்.

நடுத்தர வயது மனிதர் ஒருவர் தன்னை நோக்கி விரைந்து வருவதை வியப்புடன் நோக்கினாள் பொன்னம்மா. "அம்மா! "போதை"யிலே இருந்த உன் புருஷனைப் போலிசார் பிடிச்சுக்கிட்டுப் போருங்க." வந்தவர் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்க அவசரத்தில் சொன்னார். சிலையாகி விட்டாள் பொன்னம்மா. அவள் இதயத்தில் எண்ணமெனும் எரிமலை வெடித்துச் சிதறியது. நின்றாள்; நெடுமரம் போல் நின்றாள்.

"ஐயா! நீங்கதான் என் கணவரைக் காப்பாத்தவேணும்" நீண்ட அமைதிக்குப் பின் நிதானமாக அவள் பேசினாள். "இந்தாங்க இந்தத் தங்கச் சங்கிலியை விற்று எப்பாடுபட்டாவது அவரைக் காப்பாத்தியே தீரணும். ஐயா! இந்த உதவியை நீங்க செய்ய மாட்டீங்களா? அவரோடு ஒரே இடத்திலே வேலை செய்கிற நீங்க இந்த உதவியைக்கூடச் செய்யமாட்டீங்களா? உங்களை நம்பி இந்தச் சங்கிலியை உங்களிடம் ஒப்படைக்கிறேன்" கண்ணீர் மழைக்கிடையில் கழட்டிய தன் தங்கச் சங்கிலியை அவரிடம்கொடுத்தாள் பொன்னம்மா. வந்தவர் அதைப் பெற்றுக்கொண்டு ஆவன செய்வதாகக் கூறிப் புறப்பட்டுவிட்டார் அவசர அவசரமாக.

"கடனைத் தீர்த்துச் சுயமரியாதையைக் காக்க இந்தப் பொன் நகையைக் கொடுப்பதே சிறந்தது"—என ஏற்கெனவே முடிவு செய்திருந்த அவள், தற்சமயம் அதைவிடஉயர்ந்த செயலுக்கு அதை அர்ப்பணித்து விட்டதாக எண்ணி அகமகிழ்ந்தாள். பொன்னகையைவிடப் புன்னகை மேலும் அவளுக்கு எழில் ஊட்டியது.

★

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனோ, என் நெஞ்சம் துன்புறுகிறது! அவன் என் கனவில் வந்தனன். அத்துடனா? என்னை ஒரு பெரிய நகரினுள் அழைத்துச் சென்றனன். அங்கே, 'பாடாதது ஒரு வார்த்தை இட்டனர் ஊரார்.' என்னவருக்கு ஏதோ தீங்கு நேர்ந்தது. மன்னவனிடம் முறைகேட்டேன். அதனால், என்னாலும் ஏதோ ஒரு தீங்கு நேரிட்டது. இம்முறையில், யான் என் கணவரை அடைந்தேன். யான் உற்ற நற்றிறம் கேட்கின், நகையாகும் நினக்கும்'என்றனள்கோதையவள்.

'அஃதாயின், நான் உனக்கு ஒரு வழி கூறுகிறேன். அவ்வழி நடந்தால், நீ உன் கணவனை நிச்சயம் கிடைக்கப்பெறுவாய்! உய்த்துக் கடலோடு காவிரி சென்று, அலைக்கும் முன்றில், மாலவிழ் நெய்தல் அம்கால், தடம் உள. 'சோம குண்டம்', 'சூரிய குண்டம்', துறை மூழ்கி, காமவேள் கொட்டம் தொழுதால்'—நின் கணவரை விரைவில் அடைந்து இன்புறுவாய். எனவே, நாம் ஒரு நாள் அந்த சென்று நீராடுவோமா?" என்றனள் புதியவள்.

அதைக்கேட்ட மங்கையவள் இதயம் ஏளனத்தால் நிறைந்தது! அந்த மனம் வளராப் பெண்ணுக்கு விளக்கமுடியாமையை எணணி, ஒரே வார்த்தையில் பதிலுறுத்தாள் 'பீடு அன்று' என!

அந்நேரத்தே, 'நீடிய காவலன் போலும், கடைத்தலையான் வந்து —நம் கோவலன்!' என்றாள் ஒரு குற்றிளையாள்.

தமிழ்ப் பெண் அவள். நகைமுகம் காட்டி, வரவேற்றனள் அவளுக்கே உரியவனை!

*

ஆம்! தமிழன் கண்ட பெண்ணவள்! சிலம்பின் ஒலியால், கற்பை உலகுக்கு ஒலிக்கும் இளங்கோ கண்ட வீரமகளவள்—கண்ணகி!

புரட்டன் ஒருவனின், பொல்லாத மொழிகளை, பொய்யாக்கத் துணிந்து, உலகத்து இன்பமெல்லாம் வெறுத்து, துறவுபூண்ட இலட்சிய மகனின் கனவல்லவா கண்ணகி! காவியமான, அவளது ஒரு வார்த்தையே போதுமே, தமிழன் கண்ட பெண்மையின் சிறப்பைப் பறைசாற்ற! பிரிந்த கணவனை அடைய, பொருளற்ற வழிகளைக் கூட எண்ணாத, எண்ணினாலும் இழுக்கு பெண்மைக்கு என்று, கற்பின் சிறப்பில், வீரத்தின் விளைவுக்கு எல்லை வகுத்தவளன்றோ தமிழின்!

அவ்வாறு பிரிந்த கணவனைக்கூட, பொய்கையில் குளித்து, கோயில் வலம் வருவது, தமிழ்ப்பெண்ணுக்கு, கற்பைப் போற்றும்வழிவந்தவளுக்கு பெருமை அன்று, அழகன்று! அன்பால், அறிவால் பெறுவதே, வீரத்திற்கு அழகு! என்று அழுத்தந் திருத்தமாகக் கூறும் அவ்வார்த்தைகளில்தான் எத்துணை துணிவு! உறுதி!!

அவன் கண்டானே ஆடலழகி மாதவி! அவள் மட்டும் கற்பில் குறைந்தவளா? மனம் கொண்ட கோவலன் பிரிந்ததும், ஏதாவது கனவு கண்டாளா? காத்திருந்தாள் காலம் சிறிது—காதலன் வருவான் என்று. கானல் நீரானது எண்ணம். உதிர்ந்த சருகானாள் — உள்ளம் துறந்தாள்... அதனால், துறவு அவள் இதயத்தைத் தழுவியது. கற்பின் ஒளியாய், கண்ணகியின் துணையாய் காவியமாகத் திகழ்கிறாள். இவர்களையும், மிகுந்தாள், கோப்பெருந்தேவி! கணவனை இழந்த அந்தக் கணமே தன் உயிர்துறந்து கற்பின் எல்லையில், தன் புகழ்க்கொடி நாட்டினாள்!

இளங்கோ கண்ட மூன்று பெண்களும், மூன்று கோணங்களில் பிரிந்து, ஒரே இடத்தில் கூடி, அந்த முக்கோண எல்லைக்குள், தமிழன் பெருமையை அடக்கிவைத்தனர்.

கற்புக்குஇலக்கணம் கோப்பெருந்தேவி! தியாகத்திற்கு மாதவி!! வீரத்திற்குக் கண்ணகி!!!

ஆம்! கண்ணகி, கற்பின் திறம் பெற்றவள் மட்டும் அல்ல! வீரமகள்! வெற்றி மங்கை! தீயால்,கற்புணர்ந்த கதை படித்திருக்கிறோம்! ஆனால், இவள் — இவள்மூலம் இளங்கோ— இளங்கோ மூலம் தமிழ்க்குலம், கற்பால் தீகண்டது.

அந்தக் கவிஞன் கண்ட தமிழ்க் கனல், நம் உள்ளத்தே ஒளியேற்றி நிற்கிறதன்றோ! 'பீடு அன்று' எனும் அவ் வார்த்தையை நாம் உச்சரிக்கும்போது, நம் உள்ளம் எத்துணை பூரிப்பு, பெருமை அடைகிறது! இதயம் பொங்குகிறது!

அதன் உணர்ச்சி அலைகள்மோதி எழுப்பும் பெருமித ஒலி, சிலம்பின் இன்னிசையுடன் முழங்குகிறது.

★

# தரங்கம் ஒலிக்கின்றது

— பழநி —

கன்னித் தமிழ்காத்துப் புகழாரம் பூண்ட கவினுறு காவலராம் மூவேந்தர் சேர, சோழ, பாண்டியர் பொன்னகமாம் இத்தென்னகத்தை ஆண்டனர். அந்நாளில் ஓர் நாள்...

செல்வம் செறிந்து செருக்கழித்த சோழ மன்னனது நாடு, மக்களால் நிரம்பி வழிந்துகொண்டிருக்கின்றது. மக்கள்தம் இல்லின் முன் பந்தரிட்டுப் புதுமணல் பரப்பிப் புதுக்கோலமிட்டு மாவிலைத் தோரணங்கட்டிப் பூரித்த மனத்துடன் அந்தப் பொன்னான நேரத்தை யெண்ணிப் பெருமையடைகின்றனர். இல்லோர் அனைவரும் இன்னமுது கொண்டு இன்பம் தரும் அந்நிகழ்ச்சியை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

சோழனின் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கும் திசையெங்கும் பறை அறையப்படுகின்றது. அரண்மனையே மகிழ்ச்சியில்மூழ்கித்திளைத்துக்கொண்டிருக்கின்றது. அன்று அரண்மனையிலுள்ள ஒவ்வொரு உயிருக்கும் விடுதலை. ஆம்! கண்டு களிக்க; உண்டு மகிழ; உடுத்திப் பார்க்க, அனைத்திலுமே சுதந்தரம்தான்.

அதோ சுதந்தரகானம் எழுப்பிய வண்ணம் விற்பொறித்த சேர மன்னன் தன் சேனை பரிவாரங்களுடன் வந்துகொண்டிருக்கின்றான். அவனாட்சியின் அருமை முத்திரைக் கோடாக அவன் முகத்திலே கோடிட்டிருக்கின்றன. அவன் உள்ளமும் ஒருவித இனம் புரியா இன்பத்திலாழ்ந்து நிற்கின்றது. பரிசு தாங்கி வரும் படைகள் பளிச்சிடும் எண்ணங்களுடன் வீர ஆரவாரம் புரிந்து பவனி வந்துகொண்டிருக்கின்றனர், தஞ்சைப் பூமியின் தண்ணகராம் பாடிநோக்கி.

ஆங்கொரு திசை, தமிழ்காக்கும் அரும்புதல்வன் பாண்டிய இளவலும் வந்துகொண்டிருக்கின்றான். யானையின் மேல் அம்பாரி வைத்து ஆயுதம் ஏந்திய படைகளுடன் ஆறு பல கடந்து வந்துகொண்டிருக்கின்றான்.

*

சோழ அரசவையில் நாட்டியக்காரியாகச் சேவை புரிந்து முதுமையை அடைந்தவள்தான் அபராசிதா. தனக்குப் பின் தன் குலம் தழைக்க, ஒரே ஒரு பெண் அன்னத்தைப் பெற்றிருந்தாள் அக்குலம் போற்றும் குடிமகள். ஆனால், அவ்வண்ணம் தன் குலப் பொய்கையை விடுத்து, வேற்று ஊருணியைச் சேர்ந்துவிடும் என்பதை அவள் அறியவில்லை.

தன்குலத்தைத் தழைக்கவைக்க விரும்பிய அபராசிதா, வளர்மதியாம் அவள்தம் பூங்கோதையாளுக்கு ஐந்து

**பாடி தமிழன்பன்**

வயதில் தண்டியம் பிடித்தாள். மடவண்ணம் கோதை சிறகடிக்க ஆரம்பித்தாள் ஏழாண்டு நிறைவில் நாட்டியம் பயிற்றுவிக்கப்பட்டவள். நிறைமதியெனப் பொலிவு பெற்று விளங்கினாள். ஓவியன்தான் அவளிடத்து முழு அழகை அள்ளி வீசினானோ?... விண்ணகத்து முழு நிலவை மண்ணகத்துக் கோதை, தன் செறிந்தகரிய கதுப்புக்களிடையே சிறைபிடித்து, அதனூடே உலகுக்கு ஒளி சிந்திக்கொண்டிருக்கின்றாள். அத்தண்ணொளியின் தன்மையால் கருவண்டுகளிரண்டு அவள் நேத்திரக் கயத்தில் மூழ்கிச்சுழன்றுகொண்டிருக்கின்றன. அவள் கன்னங்களோ, கதுப்புமிகு மாம்பழத்தையும் மிஞ்சினவே. அவள் செப்பும் செந்தமிழோ, குழலிதன் மழலையோவெனத் தோன்றும். ஆம்! அழகுப் பதுமையென விளங்க, காலமெனும் ஓவியனும் அவளுக்குப் பருவமெருகேற்றிப் பன்னிரண்டாண்டு நிறைவு நல்லாளாக்கினான். அவளுக்கே இன்று அரங்கேற்றம் நடக்கவிருக்கின்றது.

தாயைப் பணிந்து நின்று, அரங்கேற்றத்திற்கு ஆயத்தமாகின்றாள். கோதைக்கான அரங்கம் சிற்ப நூற்படி அமைக்கப்பட்டு, விளக்குகள் ஏற்றி எழினிகள் வகுத்து, விதானங்கட்டி நாற்பக்கமும் நித்திலக்கோர்வை கோர்க்கப் பெற்று விளங்குகிறது.

பல நாட்டின் அரசர்களும், பெருநில மன்னர்களும் குறுநில மன்னர்களும் அவையை அலங்கரித்து, அணங்கு நல்லாள் பூங்கோதையை எதிர்நோக்கியிருக்கின்றனர். அவர்கள்தம் விழியோட்டம் ஒருநிலைப்பட, கோதை, பொற்குடத்தில் தலைக்கோலேற்றி நகர் சுற்றி அரங்கம் நுழைகின்றாள். அனைத்து மன்னர்தம் எண்ணமும் அவளையணைத்துச் செல்கின்றது. அடிமேல் அடிவைத்து நடந்துசெல்வதே ஒருவகை நடனமோவென்றெண்ணச் சுருதி கூட்டி நிற்கின்றது. சென்றவளின் கண்கள், செறிந்த மன்னர் குழாத்தில் வீற்றிருக்கும் பாண்டிய இளவலை நோக்க, நாணித் தலைகுனிகின்றாள். தமிழ்ப் பெண்ணல்லவா...!

ஆடி நடக்கும் அணங்கு நல்லாள் கோதை வலக்காலை முன்வைத்தேறிப் பொருமுகவெழினிக்கு நிலையிடனை வலத்தூணைப் பொருந்தி குயிலுவக் கருவி கூடியிசைக்க, முதலில் தமிழ் போற்றும் பாடலைக் கீதமினிய குரலால் பாடி நடனமிடுகின்றாள். அவ

எது அழகிலும் ஆடலிலும் மயங்காதார் அவ்வரங்கில் இல்லையென்று கூறலே ஒல்லும். அவ்வகையான் பூங்கோதை ஆடிமுடிக்க, அரசன் ஆரம் அணிவித்துப் பரிசளிக்க மற்றையோரும் அஃதையே செய்கின்றனர். பாண்டிய இளவலும் ஆரம் சூட்ட அதை அவள் சிரம் தாழ்த்திச் சீருடன் பெற, இளவரசனும் தன்னழகிய மார்பில் தவழும் மணிமாலையை அவளுக்குத் தருகின்ருன். ஏன்...! தன் உள்ளத்தையே கொடுத்துவிடுகின்ருன். அதை அவள் பெற்ருளோ? இல்லையோ?...

கோதையின் அரங்கேற்றத்தை எதிர்நோக்கிய மாந்தர், கண்டு களிகொண்டு மயக்கமுற்று மனையிலடங்குகின்றனர். பகலவனும் இச்செய்தியை மதிக்குக்கூற, மேற்றிசை மலையிடையே இறங்கிக்கொண்டிருக்கின்ருன்.

அம்மாலைக் காலம் அனைத்துயிருக்கும் இன்பம் தருகின்றது. ஆனுல், பூங்கோதையும் பாண்டிய இளவலும் அதற்கு விலக்காயினர். அவள் எண்ணக்கொடிச் சரங்கள், மனத்தினுள்ளே இளவலெனும் கொழு கொம்பைச் சுற்றிப் படர்கின்றது. இண்கண் மாலையும் அவளிடத்து புண்கண் மாலையாக உருக்கொண்டு வருத்துகிறது. எவ்வகையானும் இருவரும் தொடர்புகொள்ளவில்லையெனினும், அவள் தூயமனம் அவனையறியாமலேயே அவனிடம் அன்பு செலுத்துகின்றது. உள்ளன்புகொண்ட இளவலும், கோதையை நாடி வருகின்ருன். காண்கின்ருன் அக்காரிகையாளை. களிகொள்கின்ருன்.

கவின்மிகு இளம் உள்ளங்கள் இடம் மாறுகின்றன. கண்ணேடு கண் நோக்க வாய்ச்சொல்லிற்குப் பயனிலாது ஒருவரையொருவர் அள்ளிப் பருகுகின்றனர். இவர்தம் காதலுக்கு, குயிலும் கீதமினிய குரலெழுப்பி வலிவு கூட்டுகின்றது. இது கண்டு படுகதிரோனும் இடர்தராது மறைந்து கொண்டிருக்கின்ருன்.

"மிக்க நன்றி இளவரசே..."

"கோதை, எதற்காக இந்த நன்றி."

"தங்கள் அன்புக் காணிக்கையான மணிமாலைக்கும் மலர்மாலைக்கும்..."

"இதற்கு மட்டும்தானு..."

"எதிரே நிற்கும் இளங் காளையைக் கண்டதற்கும்..."

"நீ நன்றியும் கூறவேண்டுமோ?..."

"ஆமாம்...இளவரசே..நான் தமிழ்ப் பெண் அல்லவா?..."

"கோதை, நீ எவ்வளவு அழகாய் ஆடினுய் தெரியுமா!......உனது ஒவ்வொரு அங்க அசைவிலும் என் மனதைப் பறிகொடுத்துவிட்டேன்..."

"அதற்குத் தாங்கள்தானே காரணம்..."

"நானு!..."

"ஆம், நான் அரங்கேறுவதற்கு முன்னர், இத்திருவுருவத்தைக் கண்ட தனுலன்ருே மெய்யன்றி மெலிவுறும் மனமும் சேர்ந்தாடியது..."

"பூங்கோதை நான் யார் தெரியுமா?..."

"நன்ருகத் தெரியுமே.....மாற்ருனை மண்டியிடச்செய்து மாண்புறு தமிழை மணம் கமழச் செய்யும் மன்பதை காக்கும் பாண்டிய இளவலல்லவா நீவிர்..."

"ஆம்...அவனையே உனது அழகிற்கும் ஆட்டத்திற்கும் அடிமையாக்க விரும்புகின்றேன்...... ஏற்றுக்கொள்வாயா?..."

"நான் பெறற்கரிய பேறு பெற்றேன் அன்பரே..."

உள்ளமும் உடலும் ஒருங்குற இளவலின் அடிகளில் வீழ்கின்ருள். அவள் உளத்தினின்றும் எழும் கீதச்சொற்கள் வாயினின்றும் வராவண்ணம் மகிழ்ச்சி தடைபோட இன்பக் கண்ணீர் உகுக்கின்ருள். புத்தம் புதிய மாலை தவழும் அகன்ற அழகிய நறுஞ்சாந்து பூசிய தனது மார்பில் அவளையெடுத்து அணைத்துக்கொள்கின்ருன்.

வனத்தில், அழகு தவழும் காதல் இணைகளான இரு மான்கள் ஓடிவிளையாடி மகிழ்கின்றன. ஊடல் கொண்டதுபோல் பெண்மான் பிணங்கி, பின்னர் கூடல்கொள்ள, ஆண்மானை நெருங்கியும் கூடிக் குலவுகின்றது. மடமான் ஆணின் உடலினுள் அடங்கி இணைகின்றது.

இதுகண்ட காதற் சோடிகள் — கோதையும் இளவலும் ஒருவகை உணர்ச்சியால் உந்தப் பெறுகின்றனர். உள்ளம் உவகையால் துள்ளித் துடிக்கின்றது.

"இளவரசே அம்மான்களைப் பார்த்தீர்களா! எவ்வளவு அழகாக இணைந்து உறவாடுகின்றன..."

"இளம் பருவத்து உயிர்கள் இரண்டும் இவ்வண்ணம்தானே இருக்க வேண்டும். அப்பொழுது உண்டாகும் உணர்ச்சியின் உருவைத்தானே 'காதல்' என்கின்றனர் கவிஞர்."

"அன்பரே, யானும் அஃதையே விரும்புகின்றேன் என்பதை நீவிர் அறிவீரோ..."

கண்ணேடு நோக்க, பின், உள்ளம் இரண்டும்இடம்மாறக் காதல்கொண்டு உறவாடிய காதலர் கட்டித் தழுவுகின்றனர்.

"கோதை; வைகறையில் நான் எனதூர் செல்லவேண்டும். தந்தையிடம் கூறி அணிமணிகளுடன், பரிசு-படைகளுடன் சில தினங்களில் வந்து உன்னைப் பெண்கொள்கின்றேன்..... வருமளவும் வருந்தாதிரு..."

"இளவரசே விரைவில் திரும்பி விடுங்கள். என் குலத்தை வெறுக்கின்றேன். தங்கள் கரம்பற்றி இன்பம் துய்க்கக் காத்திருக்கின்றேன் கண்ணளரே..."

"நான் கடிதில் திரும்புகிறேன்... வருமளவும் பசலைகொள்ளாது உன் பொன் மேனியைக் காத்திரு..."

அக்காலை; அமைதி ஆட்சி செய்கின்றது. 'இச்-இச்' என்ற ஒலிகேட்க இருவரும் பிரியாது பிரிகின்றனர். அந்தோ செடி கொடிகளும் மரங்களும் துயர் தாளாது ஆடி அசைகின்றன. அவைகள், நறுமலர்களான கண்ணீரைச் சிந்துகின்றன.

## சிரித்த காரணம்

விமானம் உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. திடீரென்று விமானி, உரக்கச் சிரிக்க ஆரம்பித்தார்.

காரணம் யாருக்கும் புரியவில்லை.

ஒரு பிரயாணி கேட்டார் "ஏனையா, சிரிக்கிறீர்கள்? என்ன நடந்தது?" என்று!

"ஒன்றுமில்லை. நான் தப்பி வந்துவிட்டது தெரிந்தால் அந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிலேயிருப்பவர்கள், என்ன பாடுபடுவார்கள் என்று நினைத்தேன். சிரிப்பு வந்துவிட்டது" என்ருர் விமானி---சாவதானமாக!

கூடிக் குலவி முன்செல்லும் ஆண் மானைப் பெண்மான் பின்னல் துரத்திச் செல்கின்றது. அது கண்டு பொறுத வேடனெருவன் நிறுத்த வெண்ணி அம்பை விடுக்கின்ருன். ஆனல், அந்தோ, மறி வலிதாங்காது சுருண்டு துடித்து இறக்கின்றது. முன்னலோடிய ஆண்மான் தன் காதலியைக் காணது கண்ணீர்விட்டு அதுவும் வீழ்ந்து உயிர்விடுகின்றது.

❀

பூங்கோதை தன் காதற் செய்தியைக்கூறி அறத்தொடு நிற்கின்ருள். அஃதறிகின்ருள் அபராசிதா. அனலிற்பட்ட சருகென எரிகின்ருள். முகம் சிவக்க, கண்களிரண்டும் கனலெனத் தோற்றம் பெறுகின்ருள்.

'பூங்கோதை, நம் குலவொழுக்கத்தை மறந்துவிட்டாயா,....கொற்றவன் ஒருவனுக்கு அடிமையாவதல்ல நம் மரபு. மதுவேந்திய மலரைச் சுற்றும் வண்டுதானே நாம். மது கண்ட மாட்டு உண்டு, உவகை கொண்டு, பிறிதொரு மலர் நாடும் வண்டு. அதுகண்டு, நீ மனந்திரும்ப வேண்டுவதும் உண்டு...''

''அன்னையே, நம்குலம் அங்ஙனமிருக்கலாம். அதற்காக நானும் அவ்வாறுதான மாறவேண்டும்? ஒருமை மகளிரேபோல் என் அன்பும் ஒருவனிடத்துத்தானே செல்கின்றது.''

''கோதை, அவ்வாறெல்லாம் கூருதே.....பின்னர் இவ்வுலகம் என்னைத்தான் பழிசொல்லும்,குலவொழுக்கத்தை மீறியவள் என்று...''

''இஃது என்னல் இயலாத ஒன்று தாயே...''

''மீண்டும் மீண்டும் பேசாதே: நடக்கவிருக்கும் குலவொழுக்கச் சடங்கிற்கு ஆயத்தமாயிரு...''

ஒரேவழி, பெருந் துன்பத்தை மனிதன் சந்திக்க, அன்றுமுதல் அவன் தளர்ந்து வாழ்வின் பெரும்பகுதி உறக்கத்தைக் கொள்கின்ருன். எந்த ஒன்றும் விளங்குவதில்லை. கொண்டதே கோலமென்று காணும் காட்சிகளை வெறுக்கின்ருன். அதிலும் பெண் மனமோ மென்மை குன்றி மெருகு குலைந்து துயர்த் தாயைத் தழுவுகின்றது. அந்நிலைக்குத்தான் ஆளாகிவிடுகின்ருள் கோதையும். தாய் மறுத்தது அவளைப் பெரிதும் துன்புறுத்துகின்றது. எதிலும் அயர்வு கொள்ளாது இளவலின் வருகையை எதிர்நோக்கி நிற்கின்ருள். காற்றையும் கருவண்டையும் தூதுவிடுகின்ருள். இறுதியில் மயக்கங்கொண்டு உறக்கத்தில் போகின்ருள்.

கோதையின் துன்பம் தாளாது தானே என்னவோ, நிலவுக்கண்ணன் தன் காதலியாம் கார்மேகக் காரிகையாளிடம் ஓடி மறைகின்ருன் செய்தி கூற. காரிருள் கவின்மிகு இவ்வுலகைக் கவ்வ, பலர் நன்மையும், பலர் தீமையும் பெறுகின்றனர். அச்சாரரில் அபராசிதாதானும் ஒருவளென, அவ்விருளில் தன் காரியத்தை முடித்துக் கொள்கிருள். தன் மகள் இனி மேல் குலவொழுக்கத்தை மீற ஏது இல்லை என்ற நிறைவுடன் இனிய நித்திரை போகின்ருள்.

செங்கதிர்ச் செல்வன் தன் செவ்விய கதிரை வெளிநீட்டி உலகுக்குச் செவ்வண்ணம் தீட்டுகின்ருன். அதுகண்டு சிரித்தன பல; பாடின பல; நாளும் ஓடும் நதிதாண்டி, நனிமிகும் நந்தவனம் தழுவி, நகரின் விண்முட்டும் மாளிகை மோதி, மாடங்கள் நுழைந்து வந்த மென் காற்று சில்லெனத் தவழ்ந்து தொடியிடையாள் கோதையைத் தொட்டணைத்துத் துயில் கலைக்கின்றது. அதனூடே மிதந்து வந்த அரண்மனை மணியோசையும் அம்மென் காற்ருளுக்குத் துணை புரிகின்றது.

துயிலெழுகின்ருள் தூங்கா மணிக் கோதை. தன்னுடம்பிலே தோன்றும் ஒருவித தளர்வையுணர்கிருள். மஞ்சத்தில் கிடக்கும் கசங்கிய மலர்களைக் காண்கின்ருள். ஐயுற்று, உடலை அளவிடுகின்ருள். சுருள் கூந்தல் பிரிந்து, சூட்டிய மலர் பிய்ந்து, கட்டிய சேலை கலைந்து, செந்நுதலிலிட்ட திலகம் சிதைந்திருப்பதையும், துயிலுமுன்னர் தான் கொண்டிருந்த மயக்கத்தையும் தெளிவுறுகின்ருள், பொருமுகின்ருள். பொறி கலங்குகின்ருள். பலிபீடம் காணப்போகும்உயிர்போலப்பரிதவிக்கின்ருள். ஆர்ப்பரிக்கின்ருள், அதற்கான காரணங்காணது துடிக்கின்ருள். ஏதோ நினைவிற்கு வருகின்றது. ஆம். அன்ருெரு நாள் அன்னை கூறினளே......

அன்று தாய் கூறியதற்கும், இன்றைய தனது நிலைக்கும் தொடர்பு இருப்பது கண்டு கலங்குகின்ருள். கதறித் துடிக்கின்ருள். அன்னை அபராசிதாவிடம் ஓடுகின்ருள். ''அன்னையே...உனது அநீதியை எண்ணிப் பார்...ஐந்திரண்டாண்டு காலம் சுமந்து பெற்ருயே...என்னை இந்நிலையிலாக்கவா? உனதெண்ணத்திற்கு அடிகோல அறியாப் பருவத்திலே எனக்குத் தண்டியம் பிடித்து நடனம் பயிற்றுவித்தாயே, அரங்கேற்றம் செய்தாயே, அவைகளெல்லாம் எதற்காக? அரிய கற்பிழந்து அரசர் பலலோருக்கும் அணங்காக்க விரும்பினயே, அது தகுமா? அரிய இருளில் என்னை மயங்கச் செய்து பெரும்பழியைச் சுமத்தினயே, அது அறமா? இளம் உள்ளத்தில் வளர்ந்த தூய அன்பைப் பொசுக்கினயே, அது பொருந்துமா? மாதவியும் மணிமேகலையும் வாழ்ந்து மறையாது மறைந்த இப்புனித பூமியில் பிறந்த நீயா இவ்வண்ணம் துணிந்தாய்! தாயே...பெரிதென்று போற்றும் உன் குலவொழுக்கத்தை நீ மீறவில்லைத்தான். ஆனல், அகிலம் போற்றும் கற்பொழுக்கத்தை மீறிவிட்டாய். உனது குலவொழுக்கக் கோரப் பசிக்கு உனது கோதையை இரையாக்கியதை உணரத்தான் போகின்ருய்......''

அவள் வாயினின்றும் வருஞ் சொற்கள், மடை திறந்தோடும் வெள்ளத்தையும் மீறின. தன்னிலை மறக்கின்ருள். தடுமாற்றம் கொள்கின்ருள். தாரேந்திய இளவலை எண்ணியெண்ணித் தணலெனத் தகிக்கின்ருள். தாயைத் தூற்றுகின்ருள். தரணித் தாயை நோக்கி முறையிடுகின்ருள்:

'பார் போற்றும் தமிழ் நாடே பார், உனதருங்குலத்திற் பிறந்த மங்கையவள் செய்த கொடுமையைப் பார். கொடுங்கோலன் ஆட்சியினும் சொடிதாயினதே...கொற்றவன், கொள்கை வளர்த்தவன் பாண்டிய இளவலைக் காதலித்தேனே, அது குற்றமா? அவன் ஒருவனுக்கே என்னை ஒப்படைத்து அன்புகொள்ள எண்ணினேனே, அது குற்றமா? இல்லை, அவனெருவனது அழகிற்கு அடிமையானேனே, அதுதான் குற்றமா? கண்டவனெல்லாம் காதலன், கொண்டவனெல்லாம் கணவன் என்று கொள்கைகூறும் குலவொழுக்கத்தை மீறினேனே அது குற்றமா? பாவையைப் பறிகொடுத்திழந்த அவர்தம் கருவிழிக்கு நான் பாவையானேனே, அது குற்றமா? இல்லை, நெஞ்சுக்குள்ளிருக்கும் அவரைச் சுட்டுவிடுமோ என்றஞ்சி வெப்பப் பொருளையும் பருகாது விடுத்தேனே அதுதான் குற்றமா? எது குற்றம்? குற்றத்தைக் கூறுகொற்றவளே ... கூறிவிடு... வள்ளுவன் வழி நின்று, வந்தவரைக் காதலித்தேன். இப்பொழுது கைவிடவும் போகின்றேன். ஆம்... பெற்ற மகளையே கற்பிழக்கச் செய்தாளே... கற்பிழந்த என்னை எங்ஙனம் அவர்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

ஏற்பார்...? வேறொரு நல்லாளைக் கரம் பற்றி வாழட்டும்' யான் குற்றமற்ற வள் என்பதை மட்டும் உணர்த்திவிடு. இவ்வுலகும் உண்மையறியட்டும்...... உன்மத்தம் நீக்கட்டும். உண்மைத் தாயை ஈன்று தரட்டும்......''

அதற்குமேல் அவளால் தொடர்ந்து பேச முடியவில்லை. துக்கம் அவள் தொண்டையை வந்து அடைக்கின் றது. துயர் பின் தொடர, வீதிவழி ஓடுகின்றாள். காண்போர் அனைவரும் கண்ணீரைச் சிந்திக் கோதையைத் தடுக்கின்றனர். ஏனோ அவள் நிற்க வில்லை. கால்கள் இயந்திர கதியில் இயங்க, 'பாடி'யாம் கடற்கரையை நோக்கியோடுகின்றாள், கடற்கன்னி அவளை அழைக்கின்றாள் போலும்... கைவிரித்தாடுகின்றாள் –ஓடுகின்றாள்– துயரத் துருவத்தின் கோடிக்கே ஓடு கின்றாள். ஆம்! கடற்கன்னியின் அலைக்கரத்தினூடே ஓடி அணைகின் றாள்......

பாடியைச் சுற்றிப் பாமரர்! பயன் என்ன? பாதாளம் சென்றுகொண் டிருக்கின்றாள் கோதை. அன்னை அபராசிதா பாசத்தின் விளைவால் பரி தவிக்கின்றாள். அந்தோ! அண்ணல் பாண்டிய இளவலும் அவளை நெருங்கு கின்றான், மண ஆயத்தங்களுடன், படை--பரிவாரங்களுடன். பாவை கோதையின் நிலையறிகின்றான். செய் வதறியாது தவிக்கின்றான். கோதை யுடன் கொண்ட இன்ப நேரங்களை யெண்ணிப் புலம்புகின்றான். தேடி ஓடுகின்றான். இயற்கையின் துணை நாடுகின்றான். அவனது உணர்ச்சிக் கூற்றுக்கள் கவிதையாக உருப்பெறு கின்றன. பொழிகின்றான். 'தரங்கம்' எனும் துன்பம் அதில் இழைந்தோடு கின்றது. கடலிடத்தே, காரிகை நல் லாள் காதலி கோதையைக் காண அவளிடம் ஓடுகின்றான். கடற்கன்னி யும் தன் அலைக்கரங்களால் 'ஓ' வெனக் கூவியழைத்துக் கோதை யிடம் சேர்க்கின்றாள். காதலர்களுக்கு இன்பம் தந்த அப்பாடியையும் அழைத் துக் கொள்கின்றாள். ஆம்! அலைக் கரத்தின் அணைப்பிலே பாடி அமைதி யாக ஆழ்ந்துறங்க, எங்கும் தரங்கம் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. அதோ! இன்றும் பாடியினூடே, தரங் கம் ஒலித்துக்கொண்டுதானிருக்கின் றது.

★

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்றிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு காரை ஓட்டுறான்கள் சார்!'' — மற் றொருவரின் கிண்டல் சொற்பொழிவு இது!

அடிபட்டு வீழ்ந்து கிடப்பவனுக்கு இப்படிப் பேசிக்கொண்டிருப்பதே பெரும் உதவி என்று எண்ணிவிட் டார்களோ என்னவோ! ஒவ்வொரு வரும் ஏதேதோ பேசினர்; உதவ முன்வரவில்லை. உலகமே இப்படித் தான்!

கந்தசாமி ஒன்றும் பேசவில்லை. அடிபட்ட இளைஞனைத் தூக்கிக் காரில் போட்டான். கார் ஓடியது. கல்லூரியை நோக்கி அல்ல—மருத்துவ விடுதியை நாடி!

கூட்டம்...? அது இன்னும் அங்கு தான் நின்றுகொண்டிருந்தது—வம் பளந்தபடி!

✻

ராஜபார்ட் நாடகக்காரனைப்போல், குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண் டிருந்தார் தசாவதாரம். எதிரே கூனிக் குறுகி நின்றிருந்தான் கந்தசாமி. அவ ருக்கு ஆத்திரம், தன் டிரைவர் ஒரு வன்மீது காரை ஏற்றிவிட்டானே என் றல்ல; தன் அழகான காரை விளக்குக் கம்பத்தில் மோதிவிட்டானே என்று தான்!

''ஏண்டா விளக்குக் கம்பத்தில் வண்டியை இடித்தாய்?'' உறுமினார் தசாவதாரம்.

''வறண்டுபோன என் வாழ்வை எண்ணினேன். வளமுடன் வாழும் உங்களை நினைத்தேன். இருவருக்கு மிடையே ஏன் இந்த ஏற்றத் தாழ்வு என்ற சிந்தனையில் மூழ்கினேன். அதனால் நேர்ந்தது இந்த விபத்து' என்று சொல்லமுடியுமா அந்த ஏழை?

''வழிப்போக்கன் ஒருவனை அடித்து விட்டாயேடா பாவி! போலீசின் பிடியி லிருந்து உன்னைஎப்படிவிடுவிப்பது?'' என்று கேட்பார் எசமானன் என்று நினைத்துக் கொண்டிருந்த கந்த சாமிக்கு, காரைப்பற்றியே அவர் பேசி யது பெரும் அதிர்ச்சியாக இருந்தது!

''ஊமையைப்போல விழிக்கிரு யேடா முட்டாளே! நல்ல காரை இப் படி நாசமாக்கிவிட்டாயே! என் முன்னே நிற்காதே, போடா வெளியே!''

கண்ணீர் உகுத்தான் கந்தசாமி.

''எசமான்! பத்து ஆண்டுகள் நான் உங்களுக்கு உழைத்ததற்கு இதுதான் பலனா? நான் பிள்ளை குட்டிக்காரன். என்மீது இரக்கங் காட்டுங்கள். போலீ சார் என்மீது வழக்குப் போட்டிருக் கிறார்கள். என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள். இல்லையேல் என் குடும்பம்........

''பேசாதே. போ வெளியே!'' கத்தி னார் தசாவதாரம்.

கந்தசாமியைக் கண்டதும் வாலைக் குழைக்கும் அல்சேஷியன்கூட அவ னைப் பார்த்து உறுமியது.

''டேய் கூர்க்கா!''

நிலைமையைப் புரிந்துகொண்ட கந்தசாமி, பேசாமல் வெளியேறினான்!

அவன் வாழ்க்கையில் துன்பக் காரி ருள் தொலையாதா?

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, ''திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.